**MC: 1/2024 , P.W.1 :** ராஜேஸ்வரி

த.பெ., தேதி : 25.07.2025

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தகப்பனார் என்ன படித்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு நிலங்கள் உள்ளது என்றால் எனது அப்பா பெயரில் கிடையாது எனது தாத்தா பெயரில் உள்ளது. எனது தாத்தாவிற்கு ஐந்து ஏக்கர் நிலம் உள்ளது. அதில் ஒரு பாகம் எனது தகப்பனாருக்குரியது என்றால் சரிதான். வைகை நதி பாயக்கூடிய பகுதியில் தான் நிலம் உள்ளது என்றால் இல்லை. எனது தகப்பனார் விவசாயம் செய்யவில்லை கூலி வேலை தான் செய்து வருகிறார். எனது தகப்பனாருக்கு மூன்று பிள்ளைங்கள் ஆகும். எனது சகோதரர்கள் தனியாக குடியிருந்து வருகிறார்கள். எனது தகப்பனாருக்கு மாத வருமானம் 5000 முதல் 8000 வரை இருக்கும். இந்த தொகையை வைத்து எனது தகப்பனார் எனக்கு 10 பவுன் நகை வாங்க இயலாது என்றால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொன்னது போல் எதிர்மனுதாரர் எந்தவிதமான வரதட்சணையும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

2) திருமண செலவு அனைத்தும் எதிர்மனுதாரர் தான் செய்தார்கள் என்றாலும் நாங்கள் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு டெய்லரிங் தெரியும். எனது டெய்லரிங் தொழில் மூலம் மாதம் 15,000/–ம் வருமான பெறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வழக்கறிஞர் குமாஸ்தாவாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக குமாஸ்தாவா மாதம் ரூபாய் 20000/– சம்பாதிக்கிறேன் எனறால் சரியல்ல. நான் விவசாய வேலைக்கு தான் செல்கிறேன். விவசாய வேலையின் மூலம் எவ்வளவு வருமானம் ஈட்டுகிறேன் என்றால் வேலை இருந்தால்

ஒருநாளைக்கு 200 ரூபாய் பெறுவேன். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் நானும் எதிர்மனுதாரரும் எனது தந்தை ஏற்பாடு செய்த வீட்டில் தான் வசித்து வந்தோம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவற்றின் முகவரி திருமங்கலம், மம்சாபுரம், ஆண்டவர் தெருவில் குடியிருந்தோம். அந்த வீட்டில் குடியிருந்தததற்கான வாடகை ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை. திருமணத்திற்கு பின்பு எதிர்மனுதாரர் அவரது நண்பர்களுடன் குடித்துவிட்டு வீட்டிற்கு வருவார் என்று சொன்னதற்கு அவரது நண்பர்களை அடையாளம் காட்ட முடியுமா என்றால் காட்ட முடியும் ஆனால் அவர்கள் பெயர்களை குறிப்பிட்டு சொல்ல முடியாது.

3. எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் என்னை சரமாரியாக அடித்து கொடுமைப்படுத்துவார் என்று சொன்னதற்கு புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். குழந்தையை எதிர்மனுதாரர் பார்க்க வந்தார் நான் பார்க்கவிடவில்லை என்றால் சரியல்ல. உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். தேதி, வருடம் எனக்கு ஞாபகமில்லை. அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த புகாரில் போலீசார் என்னையும் எதிர்மனுதாரரையும் சேர்த்து வாழ வற்புறுத்தினார்கள் நான் வாழ மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் 8 பவுன் என்னுடைய 2 பவுன் நகையும் அடமானம் வைத்து செலவழித்துவிட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பதாக சொல்லியதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், தனியாக புகார் கொடுக்கவில்லை, மேற்படி காவல்நிலையத்தில் எல்லா விபரங்களையும் சேர்த்து புகார் அளித்தேன். அந்த புகார் மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 8ல் கடைசியில் 29.09.2010ல் இருந்து என்னையும் இரண்டாவது மனுதாரரையும் எதிர்மனுதாரர் விட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரிதான். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாரா 9ல் பல பெண்களுடன் குடித்துவிட்டு எதிர்மனுதாரர் ஊதாரிதனமாக இருந்து வருகிறார் என்று சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அரசுபள்ளியில் ஓவியர் ஆசிரியராக மாதம் ரூபாய் 50000/- சம்பாதிக்கிறார் என்றும் வட்டி தொழில் மூலமும், பயிற்சி வகுப்பு மூலமும் ரூபாய் 1,50,000/- சம்பாதிக்கிறார் என்று சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது திருமணத்தின் போது எதிர்மனுதாரர் 5000/- ரூபாய் பட்டுபுடவையும், 10000/- ரூபாய் பட்டுபுடவையும், ஒருபவுன் தங்க நகையும் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. 2012 நானாகவே எந்தவித காரணமுமில்லாமல் எனது சீர் வரிசை பொருட்களை எடுத்துவிட்டு ஓடிவிட்டேன் என்றால் சரியல்ல.

5) 2012 ல் இருந்து ரமேஷ் என்பவருடன் சேர்ந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல. எனது மீதும் ரமேஷ் மீதும் மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் SC 421/2024 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கானது கொலை வழக்கு என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி ரமேஷ் என்பவருடன் சேர்ந்து வாழ்வதால் எனக்கு

எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவானாம்சம் பெற தகுதியில்லை என்றால் சரியல்ல, நான் தனியாக குழந்தையுடன் வாழ்ந்து வருகிறேன். இரண்டாவது மனுதாரரே எதிர்மனுதாரர் வளர்த்து கொள்ள தயாராக இருக்கிறார் என்றால் இதுவரை எதிர்மனுதாரர் எனது குழந்தையை பார்த்ததே கிடையாது. நான் மாதம் 30000/- ரூபாய் சம்பாதிக்கிறேன் என்றாலும் நல்ல நிலைமையில் உள்ளேன் என்றாலும் சரியல்ல எனது குழந்தைக்கு 12 வகுப்பு பள்ளி கட்டணம் கூட செலுத்த என்னால் முடியவில்லை. என்னை பொறுத்தவரை இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

S.d. Rajeshwari
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.